1970 ஆகஸ்ட் 31]

* 152 வினு—திரு. மு. க. து. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) லால்குடி பேரூராட்சி, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்கீழ் ஓர் நகராட்சியாக அமைப்பதற்குண்டான மக்கட்தொகை அடிப்படைக் கோட்பாட்டை நிறைவேற்ருததால், அப்பேரூராட்சியை, ஓர் நகராட்சியாக மாற்றுவதற்கு, திருச்சி மாவட்ட ஆட்சியாளரும், கிராம வளர்ச்சி இயக்குநரும் அரசுக்கு சிபாரிசு செய்யவில்லை.

கயத்தார் நகரப் பஞ்சாயத்துக்குத் தெரு விளக்குகள்

* 153 வினு—திரு. மு. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுகா, கயத்தார் நகரப் பஞ்சாயத்திலிருந்து, தெரு விளக்குகள் வேண்டும் என்று கோரி 24—1—1969-ல் உயர் திரு. கங்கைகொண்டான் மின்சார அதிகாரி அவர்களுக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 29–11–1967-ம் தேதிய தீர்மான எண் 214ஐயும், 13—11—1968-ம் தேதிய தீர்மான எண் 112ஐயும் ஒட்டி 24—11—1969-ம் தேதியில், கயத்தார் ஊராட்சியிலிருந்து கங்கைகொண்டான் மின்சார அதிகாரி அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

(இ) கயத்தார் நகரப் பஞ்சாயத்தில் தெரு விளக்குகள் போடுவதற்கு, மின்சார வாரியம் அனுமதி அளித்து, வேலை துவக்கப்பட்டுள்ளது. இவ்வேலை விரைவில் முடிக்கப்படும்.

திரு. மு. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய இந்த 1972-க்குள் எல்லா ஊராட்சிகளுக்கும் தெருவிளக்குகள் போடப்படும் என்று தெரிவித்திருக்கிறுர்கள். அதற்குள் இந்த கயத்தாறுக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கேள்வியினுடைய பதிலைக் கனம் உறுப்பினர் அவர்கள் தெளிவாகக் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பதிலிலே மின்சார வாரியம் அனுமதி அளித்து, வேலை துவக்கப்பட்டுள்ளது. இவ்வேலை முடிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த வேலையோடு மற்ற வேலைகளும் முடிக்கப்படும்.